# நீலகண்ட மகாதேவ் சிவாலயம்

## -சாந்திப்பிரியா-



நீலகண்ட மகாதேவ் ஆலயம் சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இந்து ஆலயம் ஆகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 1600 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்துக்கு செல்ல வேண்டும் எனில் முதலில் ஸ்வாரகாஷ்ரமத்தில் இருந்து லட்சுமண் ஜூலா வரை பஸ் அல்லது டாக்ஸியில் செல்லலாம், பின்னர் அங்கிருந்து நீலகண்ட மகாதேவ் ஆலயத்துக்கு செல்லலாம். செங்குத்தான மலையில்

உள்ள ஆலயத்துக்கு செல்லும் பாதை மிகவும் குறுகலானது, இருபுறமும் இயற்கை அழகைக் கொண்ட அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளது. மலை மீது இருந்து கீழே வழிந்தோடும் கங்கை நதியின் அற்புதமான காட்சி கண்களுக்கு அற்புதத்தை தரும். இந்த ஆலயத்துக்கு செல்லும் குறுக்கு வழிகளில் சென்றால் சுமார் பன்னிரண்டு கி.மீ தூரத்தில் உள்ள ஆலயத்தை சென்று அடையலாம். ஆலயத்துக்கு செல்லும் வழியில் பல சிறிய ஆலயங்கள் உள்ளன.

நீலகண்ட மகாதேவ் ஆலயம் 10 ஆம் நூற்றாண்டில் போஜராஜரின் மருமகனான உதயாதித்தனால் 1116 முதல் 1137 வரையிலான காலகட்டத்தில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த ஆலயத்தை கட்டி முடிக்க 21 ஆண்டுகள் ஆனது. இந்த ஆலயத்தின் உயரம் 51 அடி. குறுக்கு வெட்டுகளைக் கொண்ட கற்களினால் ஆனது. இங்குள்ள ஆலயத்தில் சமுத்திர மந்தன் என்று கூறப்படும் பாற்கடலை கடைந்து அமிர்தம் எடுக்கும் காட்சிகள் நிறைய காணப்படுகின்றன. அதன் காரணம் இந்த ஆலயம் எழுந்ததே சமுத்திர மைந்தன் நிகழ்ச்சியுடன் சம்மந்தப்பட்டது ஆகும். அந்த நிகழ்வின்போதுதான் மூன்று உலகங்களையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக சிவபெருமான் மிகக் கொடுமையான விஷத்தை குடித்தார். உட்புறக் கருவறையில் ஒரு சிவலிங்கம் உள்ளது. நீலகண்ட மஹாதேவ் எனப்படும் சிவலிங்கம், சிவபெருமானின் அவதாரமாக கருதப்படுகின்றது. ஆலய வளாகத்தில் இயற்கையான நீரூற்று உள்ளது, அங்கு வருகை தரும் பல பக்தர்கள் ஆலய வளாகத்திற்குள் நுழைவதற்கு முன்பு அந்த புனித நீரூற்றில் குளிக்கிறார்கள்.

ஆலய வரலாற்று புராணத்தின்படி தற்போது உள்ள நீலகண்ட மகாதேவ் ஆலயம் சிவபெருமான் எந்த இடத்தில் அமர்ந்தவாறு விஷத்தை அருந்தினாரோ அதே இடத்தில்தான் அமைந்து உள்ளது. அந்த விஷம் தேவர்கள் மற்றும் அசுரர்கள் அமிர்தத்தை எடுக்க பாற்கடலை கடைந்தபோது வெளி வந்தது ஆகும். அமிர்தத்தை எடுக்க தேவர்காளும் அசுரர்களும் தெய்வீக பாம்பான வாசுகியை ஒரு கயிற்றாகப் பயன்படுத்தி, பாற்கடலை கடைந்தபோது அதில் இருந்து பல பொருட்கள் வெளிவந்தன . அப்போதுதான் அதில் ஒன்றான ஆலகால விஷம் எனும் கொடிய நஞ்சும் வெளியாயிற்று. வேறு சில கதைகளின்படி தன்னை கயிறாகக் கட்டி கடலை கடைந்தபோது ஏற்பட்ட வலியினால் அந்த தெவீகப் பாம்பானது தனது வாயில் இருந்து நச்சுத் தன்மைக் கொண்ட விஷத்தை கக்கியதாக கூறுகின்றது. அந்தக் கொடுமையான விஷத்தின் புகையை உள்ளிழுத்தால் அது மரணத்தை ஏற்படுத்தி அனைத்து உலகத்தினரையுமே அழித்து விடும் என அனைவரும் கருத்தியதினால் பகவான் விஷ்ணுவை சரணடைய, அவரும் உலகை அழிவிலிருந்து காப்பாற்ற சிவபெருமானால் மட்டுமே முடியும் என்று கூறினார். எனவே அனைவரும் சிவபெருமானிடம் சென்று உலகைக் காப்பாற்றுமாறு அவரிடம் மன்றாடினார்கள். தெய்வங்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் மூன்று உலகங்களையும் பாதுகாக்க அந்த கொடிய விஷத்தை உட்கொண்டார். அந்த விஷத்தின் வெப்பத் தன்மையின் காரணமாக அவரது தொண்டை நீல நிறமாக மாறியது. ஆனால் இன்னொரு கதையின்படி சிவபெருமான் அந்த விஷத்தை உட்கொண்டதும் அவரிடம் ஓடிச் சென்ற பார்வதி தேவி அவரது தொண்டையை அவள் கையால் பிடித்து அவரது தொண்டையை மெதுவாக தடவிக் கொடுத்து விஷத்தை உறைய வைத்தாள். அப்படி செய்யவில்லை எனில் அந்த விஷம் அவரது வயிற்றுக்குள்

சென்று விடும். அதனால்தான் அவரது தொண்டையில் தங்கி விட்ட ஆலகால விஷத்தினால் அவரது தொண்டை நீல நிறமாக மாற அவரும் நீலகண்டேஸ்வர் என்ற பெயரை பெற்றார். நீல என்றால் நீல நிறம். கந்த் என்றால் தொண்டை என்று அர்த்தம்.

சமுத்திர மந்தன் எனும் பாற்கடலை கடையும் நிகழ்வு நடந்து முடிந்த பின்னர் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தேறின. அவரவர் தத்தம் இருப்பிடங்களுக்கு சென்று விட்டார்கள் . சிவபெருமானும் தற்போது நீலகண்ட ஆலயம் உள்ள இடத்துக்கு வந்து ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டார். அந்த கடும் குளிரான இடம் அவருக்கு விஷத்தினால் ஏற்பட்டு இருந்த உடல் வெப்பத்தை குறைக்கத் துவங்கியது போல இருந்ததை உணர்ந்தார். மரத்தடியில் கடும் குளிரில் அமர்ந்து கொண்டவர் அப்ப்டியே உறங்கி விட 40,000 ஆண்டுகள் கழிந்து விட்டன. தேவலோகத்தில் இருந்த அனைவரும் பல்வேறு இடங்களுக்கும் சென்று சிவபெருமானை தேடித் கொண்டு இருந்தார்கள். அதை போலவே பார்வதி தேவியும், பகவான் பிரும்மா மற்றும் பகவான் விஷ்ணுவுடனும் சேர்ந்து சிவபெருமானை தேடித் கொண்டு அங்கு வந்தார்கள். அங்கு வந்தவர்கள் சிவபெருமானை எழுப்ப முயன்றார்கள். என்ன செய்தும் அவரை அவர்களால் எழுப்ப முடியவில்லை. ஆகையால், அவர்கள் அங்கங்கே அமர்ந்து கொண்டு அவருக்காக பிரார்த்தனை செய்யத் துவங்கினார்கள். இன்னும் இருபத்தி இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன. திடீரென அவர்களது வேண்டுதல் தவத்துக்கு விடை கிடைத்தது. சிவபெருமான் கண்களை திறந்தார். அனைவரையும் ஆசிர்வதித்த பின்னர் அவர்கள் வேண்டுதலை ஏற்றுக் கொண்டு அங்கேயே தான் சிவலிங்க உருவில் அமர்ந்து கொள்ள சம்மதித்தார். அதன்பிறகு சிவபெருமான் மற்றும் பார்வதி தேவி உள்ளிட்ட அனைவரும் தங்கள் சொந்த தங்குமிடங்களுக்குச்

சென்றனர், சிவபெருமானே அந்த இடத்தில் தனது ஆற்றலுடன் இருந்த ஒரு சிறிய சிவலிங்கத்தை நிறுவிய பின்னர் அங்கிருந்து கிளம்பி கைலாஷ் மலைக்கு திரும்பினார்.

சிவபெருமான் அங்கிருந்து சென்ற பின்னர் அந்த ஆலயம் நீலகண்ட மஹாதேவ் ஆலயம் என்ற பெயரை பெற்றது. அங்கு செல்லும் மக்கள் சிவபெருமானின் ஆசிகளை பெற்றுக் கொள்கின்றார்கள். சிவபெருமானை எழுப்புவதற்காக பகவான் விஷ்ணு, பகவான் பிரம்மா மற்றும் பார்வதி தேவி மூவரும் அமர்ந்து கொண்டு தவம் செய்த இடங்கள் விஷ்ணுகூட், பிரம்மகூட் மற்றும் மணிகூட் என்ற பெயரைப் பெற்றன. இவ்வாறாகவே நீலகண்ட மஹாதேவர் ஆலயம் மிகவும் முக்கியமான சிவன் ஆலயம் ஆயிற்று.

# Neelkanth Mahadev Temple, Rishekesh

## Santhipriya



Neelkanth Mahadev Temple is a Hindu temple dedicated to Lord Shiva. The temple is located at an altitude of about 1600 m above sea level and can be reached by bus or taxi from Swargashram to Lakshman Jhula and then from there to Neelkanth Mahadev Temple. The path up to the temple in the steep hill is very narrow, surrounded by dense forests of natural beauty on both sides and the

magnificent view of the river Ganges flowing from above is breath taking. The temple can be reached at a distance of about twelve km by following a rough path that runs through the crossroads. There are several small temples on way to the temple.

The Neelkanth Mahadev temple has been reportedly built in the $10^{th}$ century by King Bhoj's nephew Udayaditya during 1116 to 1137. It took 21 years for the temple to get completed. The height of this temple is 51 feet and has stone crossings. The temple has several scenes of devas and asuras churning of ocean called Samudra Manthan in Sanskrit, because this temple came up based on the mythological episode of Samudra Manthan in which Lord Shiva drank the deadliest poison to save the three worlds from getting destruction. The inner sanctum contains a Sivalingam which is considered to be Lord Shiva himself called Neelkanth. The temple complex houses a natural spring where devotees usually take a holy bath before entering the premises.

According to the temple legend, the place where the Neelkanth Mahadev Temple currently stands is the sacred location where Lord Shiva consumed the poison that came out from the sea when Devas (Gods) and Asuras (Demons) churned the ocean in order to obtain nectar. When the Ocean of Milk was churned to get the nectar, using divine serpent Vasuki as a rope, by the forces of devas and asuras a number of things from the Ocean of Milk came out followed by the dangerous poison called 'Halahala'. Some stories attribute the poison to be from the mouth of the divine serpent Vasuki which released fumes because of pain. The emission of such a deadliest poison terrified the divines and demons because the poison

was so toxic that if the fume was inhaled, it would destroy all creation causing death. Lord Vishnu told the divines that only Lord Shiva could save them from the destruction. Therefore they pleaded with Lord Shiva to save them. On the pleas of the divines, Lord Shiva consumed the poison to protect the three worlds due to which his throat turned to blue in colour due to its heat. As per other version, as soon as Lord Shiva drank the poison, he suffered with intense pain, but did not die and Goddess Parvathi rushed to him, held his throat by her hand and quickly stroked his throat gently to freeze the poison to ensure that the poison did not flow any further into the stomach of Lord Shiva lest, he would die. In the process of freezing the poison in his throat, the severity of the heat and fume turned his throat in to dark blue in colour. Thus, Lord Shiva earned the name Lord Neelkanth (Neela = blue, Kanth = throat).

After the process of churning the ocean or Samudra Manthan ended and other few acts of divine took place involving several divines, everyone went back while tired of the effect of the poison, Lord Shiva too reached the present site of Neelkanth Mahadev temple and lay under a big tree to get the heat effect reduced because the place was severely cold that reduced the body heat. While resting, he got into sleep which lasted over 40,000 years, and everyone including Goddess Parvathi were in search of Lord Shiva but could not find him anywhere. Ultimately Goddess Parvati along with Lord Brahma, Lord Vishnu and other celestial forces from Devaloga arrived at the present temple site where Lord Shiva was sleeping. They tried to awaken him but could not in spite of several different attempts made. Therefore they sat in nearby places and began to pray for him to open his eyes. Twenty-two thousand more years passed and the prayers of divines and

celestials were answered. Lord Shiva woke up from deep sleep to the delight and happiness of everyone who happily cheered. Accepting the prayers of the Devas and divines, Lord Shiva agreed to manifest in the same place in the form of a Shiva Ling and sit in the temple to be built for him where he had slept. Thereafter everyone went back to their own abodes including Lord Shiva and Goddess Parvathi who too returned to Mount Kailash after Lord Shiva himself left a small Shiva Ling with his energy in that site.

This place where Lord Shiva left the Shiva Ling became Neelkanth Mahadev temple where devotees seek Lord Shiva's blessings. The places where Lord Vishnu, Lord Brahma and Goddess Parvathi sat and penanced for awakening Lord Shiva earned the name Vishnukoot, Brahmakoot and Manikuoot. The Neelkanth temple has thus become one of the most important shines for Lord Shiva.